MCOP.No. 70/2023

Date : 20.01.2026

Witness Name & Rank – குமரவேல் – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். 2வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதில் மனு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். விபத்து இரவு 7 மணிக்கு நடந்து என்றால் சரிதான். விபத்து நேரத்தில் சம்பவ இடத்தில் விளக்கு வெளிச்சம் இல்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடம் ம.சா.ஆ. 4 ல் குறிப்பிட்டுள்ள சம்பவ இடத்தில் தான் விபத்து நடந்து என்றால் சரிதான். மேற்படி சாலை தென்வடல் சாலை என்றால் சரிதான், அதில் கிழக்கு பக்கம் நடந்தது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 1ல் முதல் தகவல் அறிக்கையில் கருமத்தம்பட்டி – அன்னூர் ரோட்டில் வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது அவருக்கு சற்று தொலைவில் முன்னால் சென்ற XL Super இருசக்கர வாகன பதிவு எண். TN 37 PT 0686 என்ற வாகனத்தின் ஓட்டுநர் வளையப்பாளையம் ஜெ.ஜெ நகர் காலணிக்கு செல்லும் பிரிவு அருகே மாலை சுமார் 7 மணிக்கு அதிவேகமாகவும் ஆஜாக்கிரதையாகவும் சென்று இன்டிகேட்டார் போடாமலும் எவ்வித செய்கையிலும் செய்யாமலும் எதிரில் வண்டி வருவதை பாக்காமலும் வலது பக்கமாக திரும்பி அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த Yamaha R15 வாகன மீது மோதி மோதியில் அதில் வந்தவர் தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
2. இறுதி அறிக்கை என் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சென்ற வாகன மோதி அப்ரஜீத் என்ற நபர் இறந்துவிட்டார் என்றால் நான் மோதவில்லை அவர் தான் மோதினார். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் விபத்து இறந்துபோன அப்ரஜீத் கவனக்குறைவால் தான் விபத்து நடந்ததாக சொல்லியுள்ள நிலையில் காவல் துறையினர் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை மற்றும இறுதி அறிக்கையில் எனது கவனக்குறைவால் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளனர் அதை எதிர்த்து நான் எந்த விதமான சட்ட மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன அப்ரஜீத் அவரது வாகன பதிவு எண். TN 40 AA 7797 என்ற வாகனத்தை முறையாக வாகன விதிகளுக்கு உட்பட்டு ஓட்டி வந்தார் எனது கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.
3. எனவே எனது இழப்பீடு மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனவே இரண்டாவது எதிர்மனுதாரர் எவ்விதமான இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல ம.சா.ஆ. 5 முதல் 9 ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றால் சரியல்ல.இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து இந்த இழப்பீடு மனுவானது

தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---